காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | சித்திரை 28 திங்கட்கிழமை 11.05.2026 | அதிர்வு 284

## முதல்வர் விஜய்க்கு சுமந்திரன் வாழ்த்து!



தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவி யேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 02▶




# இனவழிப்பு நாளாக மே 18 ஐ அறிவியுங்கள்

## தமிழக முதல்வர் விஜய்யிடம் கஜேந்திரகுமார் கோரிக்கை

ஈழத்தமிழர்கள்மீதுநிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவுகூரும் வகையில், மே 18 ஆம் திகதியை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுமாறு தமிழகத்தின் புதிய முதலமைச்சர் சி. ஜோசப் விஜய்க்குத் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முதலமைச்சர் விஜய்க்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:- 02▶

## நம்மைப் பிரிப்பதை விட இணைப்பதே அதிகம்



### விஜய்க்கு சஜித் உருக்கமான செய்தி

தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ “எக்ஸ்” தளத்தில் பதிவிட்டுள்ள செய்தியில், அரசியலில் நிலவும் பிரிவினைகளைக் கடந்து ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். 02▶




ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் பல்கலைக்கழகப் பரீட்சைகளில் விடைத்தாள்களைத் திருத்தும் மதிப்பீட்டாளர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும் தீர்ப்பு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் வெளியிட்டு இருக்கின்றது.

பரீட்சைக்கு தோற்றிய ஒருவர் தமது விடைத்தாள் எந்த வகையில் மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கோரினால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அவருக்கு அதை வழங்க வேண்டும், அதை மறுப்பதற்கு இடமில்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்ட இளங்கலைப் பட்டப்படிப்புத் தேர்வுக்குத் தோற்றிய ஒரு மாணவியின் விடைத்தாள்களையும் 02▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

மதிப்பெண்களையும் வெளியிடுமாறு பல்கலைக்கழக சபைக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உத்தரவை, ஆட்சேபித்து பல்கலைக்கழகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த சீராய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பல்கலைக்கழகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் மாணவர்களோடு ஒளித்துப் பிடித்து விளையாடும் கண்மூடித்தனமான கண்ணாமூச்சி விளையாட்டுக்களை நிறுத்த வேண்டும் எனவும், பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் நடவடிக்கை வெளிப்படைத்தன்மையுடையதாகவும், ஒழுங்காகவும் இருக்க வேண்டுமெனவும் கூறியுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், இவ்விடயங்களில் பல்கலைக்கழகத்தின் துணை விதிகளை விட தகவல் அறியும் உரிமைச் சட்டமே மேலோங்கும் என்றும் தெரிவித்திருக்கின்றது.

மேற்படி மாணவியின் விடைத்தாள் எவ்வாறு மதிப்பிடப்பட்டது என்பதை அறிய அந்த மாணவி சார்பில் கோரப்பட்ட விடயங்களுக்குப் பதில் தர பல்கலைக்கழக நிர்வாகம் மறுத்திருந்தது. அதற்கு எதிராக அந்த மாணவியின் தந்தையாரால் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிடம் முறையீடு செய்யப்பட்டது. முறையீட்டை ஏற்றுக்கொண்ட ஆணைக்குழு சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்கும்படி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு உத்தரவு பிறப்பித்தது.

அதை எதிர்த்து பல்கலைக்கழக நிர்வாகம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சீராய்வு மனுவை அந்த நீதிமன்றம் நிராகரித்து விட்டது. நீதியரசர்கள் டாக்டர் சுமுது பிரேமச்சந்திரா, ஆர்.குருசிங்க ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்தத் தீர்ப்பை வழங்கியது.

'பரீட்சார்திகள் தாங்கள் எழுதிய விடைத்தாள்களையும், அவை எவ்வாறு மதிப்பிடப்பட்டன என்பதையும் அறியக் கேட்டால், அதை மறுப்பதற்கு எந்தக் காரணமும் இருப்பதாக நாம் கருதவில்லை. தகவல் அறியும் உரிமையை ஒடுக்கும் பல்கலைக்கழக துணை விதிகளுக்கு சட்டத்தில் எந்த வலுவும் இல்லை. மேலும், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் முடிவு சரியான அடிப்படையைக் கொண்டது, அதை மறுக்க முடியாது என்ற கருத்தில் நாங்கள் இருக்கிறோம்' என நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

'விடைத்தாளைத் திருத்திய மதிப்பீட்டாளரின் விவரத்தை இரகசியத்தன்மைக்கு உட்படுத்தி, ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை அணுகுவதற்கான உரிமை உண்டு. எனவே, தகவல் அறியும் உரிமை ஆணையத்தின் முடிவில் குறை காண முடியாது என்ற கருத்தை நாங்கள் கொண்டுள்ளோம்' என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

இனி என்ன? பல்கலைக்கழகங்களில் விடைத்தாள்களைத் திருத்தும் கல்வியாளர்கள் பாடு அதோ கதிதான். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தத்தமது விடைத்தாள்களின் மதிப்பீட்டு முறைமையை விவரமாக அறிந்து கொண்டு, அவற்றைத் திருத்திய மதிப்பீட்டாளர்களை நெருக்கடியில் ஆழ்த்துவார்கள் என்பது நிச்சயம்.

இந்த விதிமுறைகளை காட்டி ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றம் பரீட்சார்த்தியின் விடைத்தாள்களையும் தூக்கி வைத்துக் கொண்டு நுணுகித் தோண்டி ஆய்வார்கள். பரீட்சை மதிப்பீட்டாளர்கள் சிக்கலை எதிர்கொள்ள வேண்டியதுதான்...!

---

**நம்மை...**

“தமிழகத்தின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள முதலமைச்சர் விஜய்க்கு வாழ்த்துகள். சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மையை அடித்தளமாகக் கொண்ட ஒரு புதிய யுகத்தைப் பற்றி நீங்கள் பேசியுள்ளீர்கள். வெறுப்பு மற்றும் பழைய காயங்களின் மீது கட்டப்படும் சமூகங்கள் இறுதியில் தனித்துவிடப்படும் என்பதையே வரலாறு நமக்குக் காட்டியுள்ளது.” – என்று சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

நம் பிராந்தியத்தில் உள்ள மக்கள் மொழி, மதம் அல்லது அடையாளம் கடந்து எதிர்பார்ப்பது சமூக முன்னேற்றம் மற்றும் நீதியை மட்டுமே என்று சுட்டிக் காட்டியுள்ள அவர், நம்மைப் பிரிக்கும் விடயங்களை விட, நம்மிடையே உள்ள பொதுவான பண்புகளே அதிகம் என்றும் தெரிவித்துள்ளார்.

“இந்தப் புதிய அத்தியாயம் முன்னேற்றத்தையும், கருணையையும், கடந்த காலத்தில் மற்றவர்கள் இடைவெளியை உருவாக்கிய இடங்களில் புரிதலையும் ஏற்படுத்தும் என நான் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.” என்று எதிர்க்கட்சித் தலைவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சரின் கொள்கைப் பிரகடனங்கள் இலங்கையின் அரசியல் தலைமைகளையும் கவர்ந்துள்ள நிலையில், சஜித் பிரேமதாஸவின் இந்த வாழ்த்துச் செய்தி முக்கியத்துவம் பெற்றுள்ளது.

---

**முதல்வர் விஜய்க்கு...**

பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோக பூர்வ 'எக்ஸ்' சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:-

“தமிழ்நாட்டின் முதலமைச்சர் சி. ஜோசப் விஜய்க்கு எமது மனப்பூர்வமான பாராட்டுகள்.” – என்றுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில், அவர் விடுத்துள்ள இந்த வாழ்த்துச் செய்தி, தமிழகத்தின் புதிய தலைமைக்கும் ஈழத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் ஆரம்பமாகப் பார்க்கப்படுகின்றது.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றம், கடல் கடந்திருக்கும் தமிழர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், வடக்கு – கிழக்குத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசுக் கட்சியும் தனது ஆதரவையும் வாழ்த்தையும் பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**இனவழிப்பு நாளாக...**

**வரலாற்றுச் சாதனைக்கு வாழ்த்து**

தமிழக சட்டசபைத் தேர்தலில் முதல் முயற்சியிலேயே பாரிய சாதனை படைத்து முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜய்க்கு, ஈழத் தமிழர்கள் சார்பாகத் தனது உளப்பூர்வமான வாழ்த்துக்களை அவர் முதற்கண் தெரிவித்துள்ளார்.

**2013 தீர்மானத்தின் தொடர்ச்சி**

கடந்த 2013ஆம் ஆண்டு தமிழக சட்டசபையில் ஈழத்தமிழர் மீது நடைபெற்றது 'இனவழிப்பு' என்றும், அதற்குச் சர்வதேச விசாரணை அவசியம் என்றும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைக் கஜேந்திரகுமார் எம்.பி. நினைவுகூர்ந்துள்ளார். அந்த நிலைப்பாட்டைத் தற்போதைய த.வெ.க. அரசும் உறுதியாகத் தொடர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**சட்டசபையில் புதிய தீர்மானம்**

“தங்களது தலைமையில் அமையும் சட்டசபையின் ஆரம்ப அமர்விலேயே, மே 18 ஐ 'முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக' அறிவித்துத் தீர்மானம் நிறைவேற்றுவது அவசியம். இது ஈழத்தமிழ் விவகாரத்தில் தமிழகம் கொண்டுள்ள தொடர்ச்சியான உறுதியான நிலைப்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்தும்” என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**சர்வதேச விசாரணையும் உலகத் தமிழர்களும்**

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், சர்வதேசகுற்றவியல்விசாரணையை வலியுறுத்திப் போராடி வரும் ஈழத்தமிழர்களுக்குப் பெரும் வலுச்சேர்ப்பதாக அமையும் என்றும், இதன் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர்களின் இதயங்களில் முதலமைச்சர் விஜய் நீங்காத இடத்தைப் பிடிப்பார் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள சூழலில், தமிழ்த் தேசியப் பேரவை விடுத்துள்ள இந்த முதற்கட்டக் கோரிக்கை தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

# விசாரணைக்கு வரத் தயார்!

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு மஹிந்த பதில்

சர்ச்சைக்குரிய எயார்பஸ் மோசடி விசாரணைக்காக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விடுத்துள்ள அழைப்பை ஏற்று, குறிப்பிட்ட திகதியில் தாம் ஆஜராகத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

மர்மமான முறையில் உயிரிழந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் உடலுக்கு நேற்று இறுதி மரியாதை செலுத்துவதற்காகச் சென்றிருந்த போதே, ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



எயார்பஸ் விமானக் கொள்வனவு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்காக, எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆணைக்குழுவில் முன்னிலை யாகுமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

கபில சந்திரசேனவின் மரணம் மற்றும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு வின் கெடுபிடிகள் குறித்து ராஜபக்ஷ தரப்பினர் கடும் அதிருப்தியில் இருக் கின்றனர் என்று செய்திகள் வெளியான நிலையில், மஹிந்த ராஜபக்ஷவின் இந்த நேரடிப் பதில் அரசியல் களத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தமதுதரப்புநியாயங்களைஆணைக் குழுவில் சமர்ப்பிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வுள்ளதாகவும் கோடிட்டுக் காட்டியுள் ளார்.

# நீராடச் சென்ற 15 வயதுச் சிறுவன் நீரில் மூழ்கிப் பரிதாப உயிரிழப்பு!



கேகாலை மாவட்டம், மாவனெல்லை – ஹேலிஸ்வத்த பகுதியில் மா ஓயாவில் நீராடச் சென்ற 15 வயதுடைய சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரி ழந்துள்ளார்.

மாவனெல்லைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி சிறுவன், தனது நண்பன் ஒருவனுடன் இணைந்து மா ஓயாவில் நேற்று நீராடிக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது என்று முதற்கட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நீரோட்டத்தில் சிக்கிய சிறுவன் நீரில் மூழ்கியதைக் கண்டு அருகில் இருந்த வர்கள் மீட்க முயன்றும் பலனின்றிப் போயுள்ளது.

மீட்கப்பட்ட சிறுவனின் சடலம் அர நாயக்க வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மாவ னெல்லை பொலிஸார் மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர்.

மாவனெல்லையின் பல பகுதிகளில் மா ஓயாவின் நீர்மட்டம் மற்றும் நீரோட் டம் ஆபத்தான நிலையில் காணப்படு வதால், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் நீர்நிலைகளில் நீராடும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலிஸ ார் மற்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பலாங்கொடையில் கோர விபத்து

# மின் கம்பத்துடன் மோதி மோ. சைக்கிள் ஓட்டுநர் பலி!



இரத்தினபுரி – பலாங்கொடை வீதியின் பத்கம்கொட சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடையிலிருந்து பெல்மடுல்ல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், அதிவேகம் காரணமாக வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி, அருகில் இருந்த மின் கம்பம் ஒன்றுடன் பலமாக மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளை ஞர் உடனடியாகக் கஹவத்தை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். எனி னும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரி ழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்தவர் பெல்மடுல்ல பகுதி யைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை பெல்மடுல்ல பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர்.

மழைக்காலங்களில் வீதிகள் வழுக் கும் தன்மையுடன் காணப்படுவதால், வாகனங்களைச் செலுத்தும் போது வேகத்தைக் கட்டுப்படுத்தி அவதானத் துடன் செயற்படுமாறு பொலிஸார் சாரதிகளைக் கேட்டுக்கொண்டுள்ள னர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## எதிர்பாராத ஒன்று

இந்த ஆண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளுக்காக, 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் பிரிவினருக்கு மின்சாரக் கட்டணத்தை 18 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இன்று முதல் இந்தக் கட்டண உயர்வு நடைமுறைக்கு வரவுள்ளது.

2026 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான மின்சாரக் கட்டணத் திருத்தத்தை ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. இதன் போது, 8வீதம்முதல்14.4வீதம்வரையிலான மின்சாரக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இப்போது அடுத்த ஆறு வாரத்தில் இரண்டாவது மின் கட்டண உயர்வு நடைமுறைக்கு வருகின்றது.

எரிபொருள் விலை அதிகரிப்பால் மின் உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளது என்று சுட்டிக் காட்டியே இந்த மின் கட்டண அதிகரிப்பு கொண்டு வரப்படுகின்றது.


இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பானது 180 அலகுகளுக்கும் அதிகமாக பயன்படுத்தும் பாவனையாளர்களை - அதாவது உயர் மத்தியதர வர்க்கத்தினர், வியாபாரிகள், தொழிலதிபர்கள், தொழில் முனைவோர் ஆகியோரை - இந்த மின் கட்டண உயர்வு நேரடியாகப் பாதிக்கும்.

இந்த 18 வீத மின் கட்டண அதிகரிப்பை அரசாங்கம் அறவிடும் கப்பம் என்றே கருத வேண்டியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார். தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு கட்டிக்கொள்ளவே இந்த அதிகரிப்பை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தரமற்றநிலக்கரியேஇறக்குமதியாகுகின்றது என்று எதிர்க்கட்சிகள் அம்பலப்படுத்திய சமயங்களில், அதனை ஏற்றுக் கொள்ளாது, அது தரமற்றதல்லஎன்றுஅரசாங்கம்தொடர்ச்சியாகக் கூறி வந்தது. பின்னர் நிலக்கரி தரமற்றதே என்றாலும் அதன் இறக்குமதியில் ஊழல் எதுவும் நடக்கவில்லை என்று அரசாங்கம் கூறியது. அதன் பின்பு தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் ஏற்பட்ட நஷ்டம் மின் பாவனையாளர்கள் மீது சுமத்தப்பட மாட்டாது என்று அரசு உறுதி கூறியது. ஆனால் இப்போது குறுகிய காலத்தில் இந்த மின்கட்டண உயர்வு மக்கள் மீது சுமத்தப்படுகின்றது.

தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் ஏற்பட்ட நஷ்டம் மின் பாவனையாளர்கள் மீது சுமத்தப்பட மாட்டாது என்று அரசு உறுதிமொழி தந்தாலும், அந்த நஷ்டத்தை இறுதியில் சுமக்கப் போகின்றவர்கள் யார்? நாடும் மக்களும்தானே! அந்த வகையில் பார்த்தால் அந்த நஷ்டத்தின் பாதிப்பு மின் பாவனையாளர்களான மக்கள் மீதே வந்து வீழும். அது தவிர்க்க முடியாதது.

ஆனால் அந்த நஷ்டத்தின் பாதிப்பு இவ்வளவு விரைவில் மின் கட்டண உயர்வாக மக்களின் முகத்தில் வந்து மோதும் என்பது எதிர்பார்க்காத ஒன்று தான்.


கஜானா
காலி




# நினைவுகள்தான் எங்களின் பேராயுதம் தமிழ்த் தேசிய உணர்வே எங்கள் பலம்

## முள்ளிவாய்க்கால் நாள்களில் கைக்கொள்ள வேண்டியவற்றை தமிழ் மக்களுக்கு விளக்குகின்றது தமிழ் சிவில் சமூக அமையம்

முள்ளிவாய்க்கால் நாள்களில் தமிழ் மக்கள் கைக்கொள்ள வேண்டியவற்றைத்தமிழ்மக்களுக்குவிளக்கி அறிக்கை ஒன்றைத் தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்டுள்ளது.

தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களான பொ.ந.சிங்கம், விஜயகுமார், கு. குருபரன் ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் மண்ணில் ஈழத் தமிழர்களாகிய நாம் தோற்றுவிட்டோம் என எம்மிற் சிலர் கருதினாலும் சிங்கள - பௌத்த பேரினவாத ஸ்ரீலங்கா அரசு இன்று வரை அவ்வாறு நம்பவில்லை.

தமிழ் மக்களாகிய நாம் எதிர்கொண்டு வருகின்ற தமிழ் இன அழிப்பை உணர முடியாதவர்களாக மாறி தம் மீதான தமிழ் இன அழிப்பு வரலாற்றையும் அதை நிகழ்த்தி வருபவர்கள் யாரென்பதையும் மறந்து, எங்களது பாதுகாப்பரணாக நிற்கின்ற தமிழ்த் தேசிய உணர்வை ஈற்றில் கணிசமானவர்கள் இழந்து போகும்போது சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிபந்தனையற்று ஏற்று சிறீலங்கர்கள் என்ற ஆக்கிரமிப்பு அடையாளத்தினுள் கரைந்து அடையாளமற்றவர்களாக மாறும் அளவுக்கு நமது இனம் தரமிழக்கும் போதுதான் தமிழர்களின் இறுதித் தோல்வி, அல்லது சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் உண்மையான இறுதி வெற்றி என்பது தமக்குக் கிடைக்கும் என்பதில் சிறீலங்கா அரசு தெளிவாகவே உள்ளது.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு, எங்களது தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் தத்தமது இறைமைகளை ஐரோப்பியக் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இழந்தனர்.

1948ஆம் ஆண்டு "சுதந்திரம் வழங்கப்பட்டது" எனக் கூறப்பட்டாலும், அது எமது தமிழ்த் தேசத்திற்கு உண்மையான விடுதலையாக அமையவில்லை. ஆங்கிலேய அரசின் குறைபாடுள்ள காலனித்துவ நீக்கற் (Defective/Flawed Decolonisation) கொள்கையினால் எங்கள் தேசத்தின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு, தமிழ் மக்களின் இறைமை எமது சம்மதமின்றியே அடாத்தாக சிங்கள - பௌத்த பெரும்பான்மை அரசுக் கட்டமைப்பிற்குள் கைமாற்றப்பட்டது.

1948ல் இத்தீவில் நடைபெற்ற குறைபாடுள்ள இத்தகைய காலனித்துவ நீக்கத்தினால் ஆதிக்கத்துக்கு வந்த சிங்கள - பௌத்த பெரும்பான்மை அரசின் கீழ், தமிழ் மக்கள் சிங்கள - பௌத்த பேரினவாத அரசின் அரசியல் மற்றும் நிர்வாக மேலாதிக்கத்தின் கீழ், மீண்டும் ஒரு உள்நாட்டு காலனித்துவ (Internal Colonialism) நிலைக்குள் வாழவேண்டிய துயர வரலாற்றினுள் தள்ளப்பட்டனர்.

கடந்த 78 ஆண்டுகளில் தமிழர்களின் உரிமைகளைப் படிப்படியாகப் பறித்தும் இனரீதியாக பாரபட்சமாக எம்மினத்தை நடாத்தியும் தமிழ் மொழி, பண்பாடு மற்றும் வரலாற்று அடையாளங்களையும், எமக்கான தனித்துவமான பொருளாதாரக் கட்டமைப்பையும் திட்டமிட்ட வகையில் அழித்தும், எங்கள் தாயகமான வடக்குக் கிழக்கின் நிலத்தை வகை வகையான முறைகளில் கபளீகரம் செய்தும், அனைத்திலும் மேலாக தமிழ் மக்களைப் படுகொலை செய்தும் சிறீலங்கா அரசு தமிழ் இன அழிப்பை இடைவிடாது தொடர்ந்து வருகின்றது.

நாம் எதிர்கொண்ட இன அழிப்புக் காரணமாக நாங்கள் ஒரு தேசிய இனம் என்ற பிறப்புரிமை அடிப்படையில் எமது உரிமைகளைக் கோரிப் போராடியபோது, எம் மீதான இன அழிப்பினை சிறீலங்கா அரசு மேலும் மோசமாக, கொடூரமாகத் தீவிரப்படுத்தியது. சுயநிர்ணய உரிமையின்பாற்பட்டு சமவுரிமைகளைக் கேட்டதற்காக சிறீலங்கா அரசாலும், தொடர்ந்து வந்த அரசாங்கங்களாலும் நாங்கள் ஒடுக்கப்பட்டோம், ஏதிலிகளாக்கப்பட்டோம், எமது தாயகத்திலேயே சிறுபான்மையாக்கப்பட்டோம், அடையாளங்களை இழந்தோம், படுகொலைகளுக்கும் உள்ளானோம்.

இந்த 78 வருடங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் நன்கு திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்படும் தமிழ் இன அழிப்பின் உச்சஅளவிலானகொடூரமாகமுள்ளிவாய்க்காலில் வலிந்து அடைக்கலம் புக வைக்கப்பட்ட எங்கள் உறவுகளுள் 146,679 பேர் 2009இன் முதல் ஐந்தே மாதங்களுள் திட்டமிட்டவகையில் கொடூரமான வழிமுறைகளில் அரசால் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நூற்றாண்டில் உலகில் நிகழ்த்தப்பட்ட முதலாவதும் இற்றைவரை பாரியதுமாகவுள்ள முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நிகழ்ந்து 17 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் இன்றுவரை எம்மீதான இந்த இனப் படுகொலைக்கான நியாயம் கூட எமக்கு கிடைக்காதது மட்டுமல்ல 8 தசாப்தங்களாகத் தொடரும் தமிழ் இன அழிப்பைக் கூட யாரும் நிறுத்த முன்வரவுமில்லை.

இன்றைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. தற்போதைய அரசும் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக எந்த முற்போக்கான வாக்குறுதிகளை அல்லது நற் சைகைகளைத் தன்னும் தரவில்லை. 78 வருடங்களாக அரச கட்டமைப்புகளால் திட்டமிட்ட வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தமிழ் இன அழிப்பின் விளைவுகள் எதற்கும் பரிகார நீதி எதையும் செய்யவுமில்லை. தமிழ் இன அழிப்பின் எந்தவொரு செயற்பாட்டைத்தன்னும் தற்காலிகமாகவேனும் நிறுத்தக் கூட இவ்வரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. இன அழிப்பைத் தாமும் தொடர்ந்தபடி உதட்டளவில் சமத்துவம் பேசி, இந்த அரசும் நாள்களைக் கடத்துகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தாயகத்திலிருந்து காலங்காலமாக சிங்கள - பௌத்த தரப்புகளுக்கு கிடைத்து வந்த வாக்குகளையும் தமிழ்த் தேசியச் சார்பிருந்தும் வாக்களிப்பின் போது கடந்த 16 ஆண்டுகால போக்குகளால் ஏற்பட்ட பல்வேறு ஏமாற்றங்களால் தமிழ்த் தேசியத்தைச் சற்றே புறந்தள்ளி வாக்களித்த ஒரு தொகை வாக்காளர்களதும் வாக்குளைப் பெற்று சிங்கள - பௌத்த தேசியவாதக் கட்சியான என்.பி.பி. தமிழர் தாயகத்தில் போட்டியிட்ட கட்சிகளில் தனித்தொரு கட்சி பெற்ற அதிகூடிய வாக்குகளைப் பெற்றமை எமது பாதுகாப்பு உணர்வான தமிழ்த் தேசிய உணர்வில் ஏற்பட்ட ஒரு சறுக்கல் தான்.

தமிழரின் கையோங்கியிருந்த நிலையில் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைக் குழப்பியும், பின்னர் முள்ளிவாய்க்கால் அவலங்கள் நிகழாமல் தடுக்க எடுக்கப்பட்ட போர் நிறுத்த முன்னெடுப்புகளை எல்லாம் ஆர்ப்பாட்டங்கள் மூலம் தடுத்து நிறுத்தியும், சிறீலங்கா அரசு திட்டமிட்டவாறு முள்ளிவாய்க்கால்

தொடர்ச்சி▼

# நினைவுகள்தான் எங்களின் பேராயுதம் தமிழ்த் தேசிய உணர்வே எங்கள் பலம்

## முள்ளிவாய்க்கால் நாள்களில் கைக்கொள்ள வேண்டியவற்றை தமிழ் மக்களுக்கு விளக்குகின்றது தமிழ் சிவில் சமூக அமையம்

தொடர்ச்சி▲

இனப்படுகொலையை நடத்தி முடிப்பதற்கு ஏற்பட்ட தடைகளை நீக்கியும் பேரினவாதப் பரப்புரைகள் மூலம் படைகளுக்கு ஆளணி வலுவூட்டியும், சிங்கள மக்களுக்கு போர் வெறியூட்டியும் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு காரணமாகச் செயற்பட்ட ஜே.வி.பியினர் என்.பி.பி. என்ற முகமூடியுடன் வந்த போது ஒரு பங்குத் தமிழ் மக்கள் அக்கட்சிக்கு வழங்கிய வாக்குகள் தமிழ்த் தேசியத்தை தமிழ் மக்கள் கைவிட்டுவிடுவர் எனப் பேரினவாதம் கற்பனை செய்யக் காரணமாகியுள்ளது. என்.பி.பியின் இந்த வெற்றியின் மூலம் தமிழினம் மீதான சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் இறுதி வெற்றிக்கான காலம் கனிந்து விட்டதாக எண்ணி, இன்றைய அரசு செயற்பட்டு வருகின்றது.

சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் இறுதி இலக்கான, தமிழ் மக்களிடையே ஆழமாக வேரோடியுள்ள தமிழ்த் தேசிய உணர்வு என்ற ஈழத் தமிழரின் கடைசிப்பாதுகாப்புக்கான அடையாளவுணர்வையும் அழித்து, சிங்கள – பௌத்த தேசத்தினுள் “இலங்கையர்கள்” என்ற ஒற்றை அடையாளத்துள் தமிழரை தனித்துவமான அடையாளமேதுமற்ற சிறு குழுவாக கரைத்து, இறுதி வெற்றியை எய்திடக் காலம் கனிந்து விட்டதாக 2024 தேர்தலின் பின்னர் சிறீ லங்கா அரசும் சிங்கள – பௌத்த பேரினவாதிகளும் அவர்களின் கட்டமைப்புகளும் கருதுகின்றன.

சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கடைசி வெற்றி என்பது, நாம் இன்றும் எதிர்கொள்ளும் இன அழிப்பை உணர முடியாத அறிவிலிகளாக நாம் மாறும்போதும் நாம் எதிர்கொண்ட இன அழிப்பு வரலாற்றை நாமே மறந்து போய் அந்த அவலங்களை எமக்குத் தந்தவர்களையே அவர்கள் மனம் மாறாத நிலையிற் கூட நாம் எமது தலைவர்களாக ஏற்கும் நிலை வரும்போதும் அனைத்திலும் மேலாக எமது இருப்பைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பரணாகத் திகழும் தமிழ்த் தேசிய உணர்வை இழந்து, தமிழ்த் தேசம் சிங்கள – பௌத்த மேலாண்மையிடம் சரணடையும் நிலை வரும்போதுதான் தமிழ் மக்களின் இறுதித் தோல்வி வரும் என்பதை நாம் இந்த முள்ளிவாய்க்கால் நினைவு நாள்களில் மேலும் ஒரு தடவை தீர்க்கமாக மனங்கொள்ள வேண்டும்.

1948 இலிருந்து பெருங் கொடூரமான இன அழிப்பை எதிர்கொண்டபடி இன்று வரை தமிழினம் நிமிர்ந்து நிற்பதற்கு ஒரே காரணம் எங்கள் ஆன்மாவிற் கலந்துவிட்ட தமிழ்த் தேசிய உணர்வும் எம் மீதான இன அழிப்புத் தொடர்பான எங்களது விழிப்புணர்வும்தான். தன் அடையாளத்தையும் உரிமைகளையும் காக்க நினைக்கும் எந்த ஓர் இனமும் தேசமும் தோற்றுவிடுவதில்லை.

முள்ளிவாய்க்காலில் எமது உரிமைகளுக்கான சுடுகருவிகள் மௌனித்திருக்கலாம். ஆனால் அவற்றை ஏந்த வைத்த அந்த இன அழிப்பு இன்னமும் நிற்கவில்லை. தமிழ்த்தேசியம் என்பது கனவோ கற்பனையோ அல்ல. அது ஒரு மக்கள் கூட்டம் தன் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகக் கட்டமைக்கின்ற காப்பரண்.

முள்ளிவாய்க்கால் நினைவுக்காலம் என்பது இனப்படுகொலைக்கு உள்ளானவர்களை நினைவுகொள்ளும் காலம் மட்டுமல்ல. தமிழ்த்தேசம் மீதான ஒட்டுமொத்த இன அழிப்பையும் எம் தேசிய நினைவில் மாறா வடுவாகப் பதிய வைப்பதற்கான நாளுமாக மாற வேண்டும். எமது தேசத்தின் பிறப்புரித்தான சுயநிர்ணய உரிமைக்கான அவாவை அடையும் உறுதியை எம் தேசத்தின் ஆன்மாவில் மேலும் உறுதியாக பதியவைப்பதற்கான காலமுமாகும்.

எம் சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்ளகாலம் எத்தனையும் செல்லலாம். அதுவரை இந்த நாள்களை எங்கள் தேசிய உணர்வுகளைப் புடம் போடுவதற்கும் வலிமையுற வைப்பதற்குமான நாள்களாகவும் எங்கள் அடுத்த சந்ததிகளுக்கு எம் மீதான சிங்கள – பௌத்த பேரினவாத அரசின் கொடூரமான இன அழிப்பு வரலாற்றையும் அதன் நினைவுகளையும் கைமாற்றவும் நுணுக்கமாகவும் ஆழமாகவும் திட்டமிட்டு சூசகமாக இடம்பெறும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை அடையாளங் காணக் கூடியவர்களாக எம்மை தகவமைத்துக் கொள்ளத் தேவையான அறிவை வளர்த்துக் கொள்ளவும் தாயகம் முழுவதும் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களிலும் தமிழருள்ள ஒவ்வொரு ஊர் ஊராகவும் வீடுவீடாகவும் ஒவ்வொரு தமிழனுமாக அதற்கான பணிகளை நாம் அனைவரும் செய்வதற்கான சங்கற்பத்தை இந்த முள்ளிவாய்க்கால் நாள்களில் நாங்கள் கைக்கொள்வோம். அதற்காக,

1.முள்ளிவாய்க்கால் கஞ்சி: முள்ளிவாய்க்கால் மண்ணில் அரசின் பொருளாதாரத் தடையால், கணிசமான வேளைகளில் ஒரு நேர உணவாக எமது உறவுகள் உட்கொண்ட ஒருணவான முள்ளிவாய்க்காற் கஞ்சியை இந்த நாள்களில் வீடுகளில் நாம் அருந்தி எமது பிள்ளைகளுக்கு எம் கதைகளைக் கூறியும், பொது இடங்களில் முள்ளிவாய்க்காற் கஞ்சியை கூடிச் சமைத்து பிறருக்கும் வழங்கியும் நினைவுகளைக் கடத்தும் ஒரு நிகழ்வாக மாற்றுதல் கிராமங் கிராமமாக மடியரிசி சேர்த்து கூட்டாக கஞ்சி காய்ச்சி கூட்டாக இருந்து பகிர்ந்துண்டும் அந்த இடத்தில் அனுபவங்களை சிறுவர்களுடனும் இளைஞர்களுடனும் மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளல்.

2.முள்ளிவாய்க்கால் நினைவு நாளான மே 18 இல் வீடுகளிலும் பொது இடங்களிலும் நினைவுச் சுடரேற்றி சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் இன அழிப்பில் நாம் இழந்தவர்களையும் குறிப்பாக முள்ளிவாய்க்கால மண்ணில் 2009 இன் முதல் ஐந்து மாதங்களில் படுகொலை செய்யப்பட்டவர்களையும் நினைவு கூர்ந்து அவர்களின் ஆன்மாவில் வலிகளையும் வலியைத் தந்தவர்களையும் மறக்காதிருக்க உறுதி செய்வோம்.

3.முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழும் நினைவு நிகழ்வு – இயலுமானவர்கள் அனைவரும் முள்ளிவாய்க்காலில் மே 18 இல் நிகழவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் ஒன்றுகூடி இன அழிப்பு நினைவுகளை மறக்காதிருக்க உறுதி கொள்வோம்.

4. குருதிக் கொடை – இயன்றவர்கள் குழுக்களாகவும் அமைப்புகளாகவும் இந்தக் கிழமையில் குருதிக் கொடை நிகழ்வுகளை ஒழுங்கு செய்வோம்.

5. பொது நினைவு நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல் – பொது இடங்களிலும் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் இக்கிழமை முழுவதும் தினமும் ஒரு வேளையாவது நினைவுச் சுடரேற்றல், தினமும் ஒருவராவது சுருக்கமான நினைவுரையாற்றல்.

6. மாணவரிடையே பேச்சு, கட்டுரை, கவிதை நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல்.

7. கண்காட்சிகள் – இன அழிப்பை நினைவு கூரும் மற்றும் தமிழ்த் தேசிய அடையாளங்களை வலியுறுத்தும் புகைப் படக் கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல்.

8. சிரமதானங்கள் – இந்தக் கிழமையில் பொது இடங்களிலும், இன அழிப்புடன் அல்லது தமிழத் தேசிய அடையாளங்களுடன் தொடர்புள்ள இடங்களில் சிரமதானங்களை ஒழுங்கு செய்தல்.

9. ஒவ்வொரு கிராமமும் தத்தமது கிராமங்களில் இடம்பெற்ற சகல படுகொலைகள் மற்றும் ஏனைய வகையிலான இன அழிப்பு சம்பவங்களை நினைவு கூரும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல். இவ்வாறான வரலாற்றை நினைவில் நிற்க வைக்கும் வகையில் பொது நினைவாலயங்கள் அல்லது நினைவுத் தூபிகளை அல்லது கல்வெட்டுகளை அமைத்தல்.

தொடரும் இன அழிப்பை அடையாளங் காண்பதும், இன அழிப்பையும் அதை எங்களுக்கு செய்தவர்களையும் சந்ததி தோறும் மறவாதிருப்பதற்கான பணிகளைச் செய்வதும் எம் தேசத்துக்காக நாங்கள் ஆற்ற வேண்டிய பணியென்பதை ஒவ்வொரு தமிழனும் நினைவு கூரும் நாள்களாகவும் தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதற்கான நாள்களாகவும் ஆண்டு தோறும் வரும் மே 18ஐயும் அதனோடிணைந்த நாள்களையும் நாங்கள் மாற்றுவோம்.

நினைவுகளே எங்கள் பேராயுதம். தமிழ்த் தேசிய உணர்வே எங்கள் பலம். – என்று உள்ளது.

# சுற்றுலாப் பயணிகளின் வானை உடைத்து மடிக்கணினியைத் திருடிய மாணவர் குழு

## மஸ்கெலிய சம்பவத்தில் நான்கு பேர் கைது



**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

மஸ்கெலியாவில் உள்ள காட்மோர் நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வந்த உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் குழுவிடமிருந்து சுமார் ஆறு லட்சத்து பதினெட்டாயிரம் ரூபா மதிப்புள்ள மின்னணுப் பொருள்களைத் திருடினர் என்ற சந்தேகத்தின் பேரில், நான்கு பள்ளி மாணவர்களை மஸ்கெலியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையத் தலைமை அதிகாரி எஸ்.எஸ்.புஷ்ப குமார தெரிவித்தார்.

119 பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவில் பெறப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, மஸ்கெலியா பொலிஸாரின் சிறப்பு பொலிஸ் குழு ஒன்று காட்மோர் பகுதியில் இருந்து 14 மற்றும் 12 வயதுடைய நான்கு பள்ளி மாணவர்களைக் கைது செய்தது.

நேற்று முன்தினம் காலை, திருமண நிச்சயதார்த்தம் ஆன தம்பதியினருடன் படம் எடுப்பதற்காக தலவாக்கலை பகுதியிலிருந்து டொல்பின் வானில் வந்த உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் குழு, கார்ட்மோர் நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் சாலையில் வானை நிறுத்தி நீர்வீழ்ச்சிக்கு அருகில் சென்றபோது, சந்தேக நபர்கள் அவர்கள் வந்த வானின் பக்கவாட்டுக் கண்ணாடிகளை உடைத்து, அதிலிருந்து ஒரு மடிக்கணினி, ஒரு டப் மற்றும் ஒரு பவர் பேங்க் ஆகியவற்றைத் திருடிச் சென்றனர் என பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தப் பொருள்களின் மதிப்பு சுமார் 618,000 ரூபா என்று அவற்றின் உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களால் திருடப்பட்ட பொருள்கள், கார்ட்மோர் தேயிலைத் தோட்டத்தின் வனப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போது பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் திருடப்பட்ட பொருட்களுடன் ஹட்டன் நீதிமன்றத்தில் இன்று 11 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட உள்ளனர் எனவும், மேலதிக விசாரணைகளை நடத்தி வரும் மஸ்கெலியா தெரிவித்தார்.

# நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளை காப்பாற்றுவதற்கு நிதிக் குழு முயற்சி

## சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம் காட்டம்!

மத்திய வங்கி மற்றும் திறைசேரி தொடர்பான சர்ச்சைக்குரிய பணக்கொடுக்கல்வாங்கல் குறித்து, நாடாளுமன்ற நிதிக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை, உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாக்க முயற்சிக்கின்றது என 'சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம்' குற்றம் சுமத்தியுள்ளது.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையின் மூலம், உயர் அதிகாரிகளைப் பாதுகாத்து, தவறை கீழ்மட்ட அதிகாரிகள் மற்றும் கணினி கட்டமைப்புகள் மீது சுமத்த முயற்சிக்கப்படுவதாக அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 121-இன் கீழ் நிதிக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்பூர்வப் பொறுப்பை இந்த அறிக்கை மீறியுள்ளதாகவும், இது வெறும் தகவல்களைத் திரட்டும் ஓர் அறிக்கையாக மாத்திரமே அமைந்துள்ளதாகவும் சட்டத்தரணிகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த மோசடியுடன் தொடர்புடைய அதிகாரிகள் தமது தவறுகளை மறைப்பதற்கும், ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் நிதிக் குழு ஒரு மாத கால அவகாசத்தை வழங்கியதன் மூலம் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

30 நாள்கள் கடந்தும் மத்திய வங்கியின் நிர்வாக அதிகார சபை இது குறித்து மௌனம் காப்பதாகவும், மத்திய வங்கியின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கே குழு செயற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திறைசேரி, வெளிநாட்டு வளங்கள் மற்றும் கடன் முகாமைத்துவப் பிரிவுகள் தமக்கிடையே எவ்வித ஒருங்கிணைப்பும் இன்றி மூன்று சுயாதீனமான கணினி கட்டமைப்புகளைப் பயன்படுத்துவதே இந்த நெருக்கடிக்குக் காரணம் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி ஒழுங்குவிதி 135-இன் கீழ் நிதி அதிகாரத்தை கையளிக்கும் போது, பிரதான கணக்கீட்டு அதிகாரியான நிதிச் செயலாளர் ஹர்ஷண சூரியப்பெரும முறையான விழிப்புணர்வுடன் செயற்படவில்லை என "சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம்" தெரிவித்துள்ளது.

இவ்வளவு பெரிய தொகையிலான நிதிப் பொறுப்பை ஒரு தனிப் பணிப்பாளரிடம் ஒப்படைப்பது ஒரு தவறான நிர்வாக நடைமுறை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"உண்மையான குற்றவாளிகளை மறைக்க வேண்டிய அரசாங்கத்தின் தேவைக்காக, நாடாளுமன்ற நிதிக் குழு தனது உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்கியிருப்பது குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதாக" அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.






# சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு நீதிக்காக 3 எம்.பிக்களுடன் மட்டக்களப்பில் கலந்துரையாடல்

(ஜதுர்சயன்)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், இணைந்து ஏற்பாடு செய்திருந்த சமூக பொருளாதார அரசியற் பண்பாட்டு நீதிக்காய் மக்கள் பிரதிநிதிகளை அணுகல் எனும் கருப்பொருளின்கீழ் மக்களுடனான திறந்த கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்டத் தலைவர் திருமதி இந்துமதி ஹரிகரதாமோதரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், இளையதம்பி சிறிநாத், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சட்ட உருவாக்கம் மற்றும் கொள்கை மாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் சட்டத்தரணி குகதாசன் ஐங்கரனின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. பெண்கள் நுண்கடன்களால் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகளிலுள்ள பாதுகாப்பின்மை தொடர்பாக தனது அனுபவங்களை மட்டக்களப்பு மாவட்ட அமரா பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் ஒன்றியத்தின் சார்பாக மதனா பாலகிருஷ்ணராஜா பகிர்ந்து கொண்டார்.

பெண்களுக்கெதிரான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தீர்ப்பதற்கான சட்ட வழிமுறைகளில் மட்டுப்படுத்தல்கள், அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம், மக்கள் பிரதிநிதிகளின் தொடர் செயற்பாடுகள் தொடர்பான திறந்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

மாதவிடாய்சார் பாராபட்ச நிலைமைகளும் அரச கொள்கைகளின் அமுலாக்கமின்மையும் தொடர்பாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்டத் தலைவர் திருமதி இந்துமதி ஹரிகரதாமோதரன் தெளிவூட்டல் வழங்கினார்.

சமுதாயத்தில் அடையாளப்படுத்தப்பட்ட சமகால சமூகப் பொருளாதார அரசியற் பண்பாட்டுப் பிரச்சினைகள் மற்றும் இடைவெளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமகால பொருளாதார நெருக்கடிகளும் அவர்களின் கோரிக்கைகளும், மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிரச்சினைகள் மற்றும் வீட்டுத் திட்டம் தொடர்பான சவால்களும் உடனடி நடவடிக்கைகளும், நிலைமாறுகால நீதிச் செயன்முறைப் பொறிமுறைகளின் செயற்பாடின்மையும் மக்களுக்கான நீதி புறக்கணிக்கப்படலும் தொடர்பான கருத்துக்களையும் திருமதி இந்துமதி ஹரிகரதாமோதரன் பகிர்ந்து கொண்டார்.

வாகரைப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக ஆசிரியர் கணேசமூர்த்தி விக்கிரம்சிங்கன் இதன்போது விளக்கினார்.

மக்கள் சேவை அணுகலில் மொழியுரிமை மீறப்படலும் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்த சவால்கள், போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தும் சமூக, பொருளாதார அரசியற், பண்பாட்டுநெருக்கீடுகள்தொடர்பாகவும்இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இங்கு கலந்து கொண்ட மக்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு இதன்போது பிரசன்னமாகியிருந்த 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களுக்குப் பதில்களை வழங்கியமையோடு, தெழிவூட்டல்களையும் வழங்கினர். மக்களின் கோரிக்கைகளை தமக்கு எழுத்து மூலம் முன் வைக்குமாறும் அவற்றுக்கு உரிய அதிகாரிகள், அமைச்சர்களினதும் கவனத்திற்குக் கொண்டு சென்று தீர்வுகளைப் பெறுவதற்கு தாம் முன்னிற்கின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தமையோடு கொள்கைகளில் மாற்றம், சட்ட உருவாக்கம், தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தனர்.













# நீண்ட கால வெப்பத்தின் பின்னர் திருகோணமலையில் கனமழை!

மிக நீண்ட நாள்களின் பின் கடும் உஷ்ணமான காலநிலையைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களில் மழை பெய்துள்ளது.

கடும் வெப்பமான கால நிலையின் பின் நேற்று மாலை நேரத்தில் மழை பெய்துள்ளது. தற்போதைய நிலையில் விவசாயிகள் நெற் செய்கைக்காக விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் மழை பெய்துள்ளது.

தம்பலகாமம். கிண்ணியா, கந்தளாய் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்ய ஆரம்பித்துள்ளமையுடன் மேகம் மப்பும் மந்தாரமுமாக தொடர்ந்தும் காட்சியளிக்கிறது.

கடுமையான வெப்ப நிலை நிலவியதன் காரணமாக வறட்சியாகக் காணப்பட்ட நிலங்கள் தற்போது மாற்றம் கண்டுள்ளது.

# பிபில, பிட்டகும்புரவில் வீட்டுத் தோட்டம் ஒன்றில் செழித்து வளர்ந்த 57 கஞ்சாச் செடிகள் சிக்கின!

**(நடராஜா மலர்வேந்தன்)**

பிபில, பிட்டகும்புர பகுதியில் உள்ள ஒரு வீட்டுத் தோட்டத்தில் செழித்து வளர்க்கப்பட்ட கஞ்சா செடிகள் வளைத்து பிடிக்கப்பட்டுள்ளன.

பிபில, பிட்டகும்புர, ஹாதேகனுவ பிரதேசத்தில் உள்ள ஒரு வீட்டுத் தோட்டத்தில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டிருந்த பெருமளவிலான கஞ்சா செடிகள், பிபில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.கே.ஜயலத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் பிபில பொலிஸ் அதிகாரிகளால் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் கண்டுபிடிக்கப்பட்டன.

அதன்போது, சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டனர். ஆறு அடி உயரத்திற்கும் மேற்பட்ட 57 கஞ்சாச் செடிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.








# கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் இளைஞர், யுவதிகளுக்கு ஊடகப் பயிற்சி வழங்கல்

(ஜதுர்சயன்)

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் ஊடகவியலாளர்களுக்கான ஊடகப் பயிற்சி கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வடிவேல் சக்திவேல் தலைமையில் மட்டக்களப்பில் அமைந்துள்ள வொயிஸ் ஒவ் மீடியா நிறுவனத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையில் பல சமூக சேவைகளை மேற்கொண்டு வரும் அம்மன் மகளிர் இல்ல பௌண்டேஷன் அமைப்பின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் இளம் ஊடகவியலாளர்களாக உருவாக்கும் எண்ணக்கருவுக்கமைய இப் பயிற்சிநெறி மாவட்டத்தில் இரண்டாவது இளைஞர் தொகுதியினருக்கு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது செய்தி எழுதுதல், ஊடக தர்மம், போலிச் செய்திகளைக் கண்டறிதல் மற்றும் இணையப் பாதுகாப்பு, சமூக ஊடகங்களைக் கையாளும் விதம் போன்ற முக்கியமான தலைப்புகளில் அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சி நெறியின் இறுதியில் சான்றிழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது சிரேஷ்ட ஊடகவியலாளர்களான எல்.தேவஅதிரன், வ. சக்திவேல், வ.துசாந்தன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு ஊடகப் பயிற்சிகளை வழங்கினர்.

சான்றிதழ் வழங்கும் இந்நிகழ்வில் அம்மன் மகளிர் இல்ல பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் வி.வாமதேவன், இணைப்பாளர் ரஞ்ஜித்குமார், அவ்வமைப்பின் ஆலோசகரும் பிரபல சமூக சேவையாளருமான வி. கமலதாஸ், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.








# மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக மாவட்டம் தோறும் அரச எம்.பிக்களுக்கு நியமனம்



நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பில் நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை மக்களுக்கு மிகவும் வினைத்திறனுடன் கொண்டு சேர்ப்பதுடன், வளங்களை முன்னுரிமை அடிப்படையில் சரியாகப் பயன்படுத்துவதை இலக்கு வைத்து மாவட்ட மட்டத்திலான சுகாதார சேவை ஒருங்கிணைப்பை வலுப்படுத்த சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ அவதானம் செலுத்தியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை “மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக” நியமிப்பதற்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் சுகாதார நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறைபாடுகளை நீக்கி, மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

உத்தேச நடைமுறைகளின்படி புதிய அதிகாரிகளின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் வருமாறு:-

# மக்கள் பங்களிப்புடன் மாவட்ட மட்டத்திலான சுகாதாரத் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை முன்னுரிமைப் படுத்துதல்.

# அத்தேவைகளை தேசிய மற்றும் மாகாண சுகாதாரத் திட்டங்களுடன் இணைக்க வசதி செய்தல்.

# மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்கு இடையே வளங்களைச் சரியாகப் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்தல்.

# முக்கியமான புதிய திட்டங்களை அடையாளம் கண்டு அமைச்சுக்குப் பரிந்துரைத்தல்.

# தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, உரிய காலத்திற்குள் அவற்றை நிறைவு செய்ய உதவுதல்.

நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் விவரம் வருமாறு:-

# அநுராதபுரம்: சுசந்த குமார நவரத்ன

# பதுளை: ரவீந்திர பண்டார

# மட்டக்களப்பு: கந்தசாமி பிரபு

# கொழும்பு: வைத்தியர் நஜித் இந்திக்க

# திகாமடுல்ல (அம்பாறை): எம்.எம். சுகத் ரத்நாயக்க

# காலி: வைத்தியர் நிஷாந்த சமரவீர

# கம்பஹா: தர்மப்பிரிய விஜேசிங்க

# ஹம்பாந்தோட்டை: வைத்தியர் சந்தருவன் மதரசிங்க

# யாழ்ப்பாணம்: வைத்தியர் எஸ். ஸ்ரீபவனந்தராஜா

# கேகாலை: ஆர்.எம். சமந்த ரணசிங்க

# களுத்துறை: வைத்தியர் நிஹால் அபேசிங்க

# கண்டி: தனுர திசாநாயக்க

# குருநாகல்: வைத்தியர் ஜகத் குணவர்தன

# மாத்தளை: செல்வி. தீப்தி நிரஞ்சனி வசலாகே

# மாத்தறை: லால் பிரேமநாத்

# மொனராகலை: எச்.எம். சரத் குமார

# நுவரெலியா: டி. மஞ்சுள சுரவீரஆராச்சி

# பொலன்னறுவை: பத்மசிறி பண்டார

# புத்தளம்: கயான் ஜனக்க

# இரத்தினபுரி: வைத்தியர் ஜனக சேனாரத்ன

# திருகோணமலை: ரொஷான் அக்மீமன

# வன்னி: செல்வதம்பி திலகநாதன்

இந்த புதிய பொறிமுறையூடாக சுகாதார சேவையின் தரத்தை மேம்படுத்தி, மக்களுக்கு நம்பிக்கையான மற்றும் இலகுவான சேவையை வழங்க சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு எதிர்பார்க்கிறது என்று அறிவிக்கப்படுகின்றது.

## மன்னார் - முள்ளிக்குளம் வழித்தடத்தில்

# முன்னறிவித்தலின்றி சேவையை நிறுத்திய தனியார் பஸ் உரிமையாளருக்குத் தண்டம்

(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)



மன்னார் – முள்ளிக்குளம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று முன்னறிவித்தல் இன்றி சேவையில் ஈடுபடாமை மற்றும் பயணிகளுடன் அந்த பஸ்ஸின் நடத்துனர் முரண்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக, பஸ் உரிமையாளருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தனியார் பஸ் முன் அறிவிப்பு ஏதுமின்றி தனது சேவையைப் புறக்கணித்தமையால், அந்த வழித்தடத்தைப் பயன்படுத்தும் பொதுமக்கள் எனப் பலரும் வீதியில் காத்திருந்து பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

அத்துடன், சேவை புறக்கணிப்பு தொடர்பில் கேள்வியெழுப்பிய பயணிகளுடன் அந்த பஸ்ஸின் நடத்துநர் முறையற்ற விதத்தில் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி முரண்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பயணிகளால் அதிகார சபைக்கு கொண்டுவரப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், போக்குவரத்து அதிகார சபை ஊடாக துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணையின் முடிவில், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் விதிமுறைகளை மீறி, பயணிகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் சேவையை துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய குற்றங்களுக்காக அந்தத் தனியார் பஸ்ஸுக்கு 4,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன், இனிவரும் காலங்களில் பயணிகள் சேவையின் போது இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால், அந்த பஸ்ஸின் சேவை அனுமதி பத்திரம் முற்றாக ரத்து செய்யப்படும் எனவும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பொதுப் போக்குவரத்தின் போது பயணிகள் சேவையில் ஈடுபடும் தரப்பினரால் முறைகேடுகள் இடம் பெற்றாலோ அல்லது அதிக கட்டணம் அறவிட பட்டாலோ, பொது மக்கள் தகுந்த ஆதாரங்களுடன் (பயணச்சீட்டு, ஒளிப்படங்கள் அல்லது காணொலிகள்) அதிகார சபையின் 0719090900 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு உடனடியாக தெரியப்படுத்த முடியும் என அதிகார சபை மீண்டும் வலியுறுத்துகின்றது.

# வளமான ஈழத்தை அமைக்க விஜய் ஒத்துழைக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை



வளம் மிக்க தமிழகம் மாத்திரமல்லாமல் வளமான ஈழத்தை அமைப்பதற்கும் விஜய் ஒத்துழைக்க வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்நாட்டின் புதிய முதல் அமைச்சருக்கு ஈழத்தமிழ் மக்கள் சார்பாக முழுமையான வாழ்த்துக்களை கூறுகின்றோம். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு அவர் கடினமாக உழைப்பார் என்று நம்புகின்றோம். அவர் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த ஒருவர்.

இந்தியாவில் தமிழகம் பல விடயங்களில் வளர்ச்சியடைந்த ஒரு மாநிலமாக உள்ளது. அது அடுத்த கட்டம் நோக்கி செல்வதை ஈழத்தமிழர்கள் முக்கியமாக கருதுகின்றோம். தமிழகம் முன்னேறினால் அது ஈழத்தமிழர்களுக்கு நிறைய வாய்ப்புகளை உண்டாக்கும்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை முழுமையாகப் புரிந்து கொண்டு இரண்டு தரப்பும் கைகோர்த்து செயற்படுமாக இருந்தால் நிச்சயமாக உலகத்தில் தமிழ் மக்களின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

விஜய் முதன்முறையாக வந்திருந்தாலும் கூட பெருமளவு மக்களின் கவனத்தை தன் பக்கம் திருப்பியுள்ளார். எனவே வளம் மிக்க தமிழகம் மாத்திரமல்லாமல் வளமான ஈழத்தை அமைப்பதற்கும் அவர் ஒத்துழைப்பார். ஒத்துழைக்க வேண்டும்.

கச்சதீவு விடயம் தொடர்பாக பேசவேண்டியது டில்லியும் கொழும்பும். கச்சதீவு தமிழகத்திற்கு சொந்தமாக வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. மீனவர் பிரச்சினையும் அதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது.

மீனவர் பிரச்சினைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் கச்சதீவு விடயம் காணாமல் போய்விடலாம். இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அங்கும் இருக்கிறார்கள், இங்கும் இருக்கிறார்கள். எனவே உறுதியான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்த விடயங்களில் புதிய முதல் அமைச்சர் இந்திய மத்திய அரசுடன் பேசி காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பு.

அத்துடன் இலங்கை அரசு புதிய அரசியல் யாப்பை கொண்டுவரும் பட்சத்தில் அதில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக எவ்வாறான விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதை தமிழ் தரப்பில் இருந்து ஒருமித்த குரலில் சொல்வதற்காக சட்டத்தரணிகள் பேரவையானது தமிழ் கட்சிகளை இணைத்து ஒரு குழுவை நியமித்துள்ளன.

இதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் கலந்து கொண்டிருந்தது. ஆனால் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகள் கலந்து கொள்கின்ற இடத்தில் தங்களால் கலந்து கொள்ள முடியாது என அவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் அது தவறான ஒரு விளக்கம். அங்கு இல்லாவிடிலும் அந்த கட்சியினர் உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களை வைத்துள்ளனர். கட்சியாக செயற்பட்டு வருகின்றனர். எனவே அது ஒரு பிரச்சனைக்கு உரிய விடயமல்ல.

இது கட்சி சார்பான விடயமும் அல்ல. அது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுகின்றமை தொடர்பானது. எனவே ஒரே விதமாக ஒருமித்த கருத்தை தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும். எமது கூட்டணிக்குள் ஒருமித்த கருத்து உள்ளது. தமிழீழத்திற்காக போராடியவர்களே ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம்.

எனவே உச்சப் பட்சமான ஒரு சமஷ்டி அமைப்பு முறை என்பது தமிழ் மக்களின் இனப் பிரச்சனையை தீர்க்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எனவே நாடு பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும், அமைதி இருக்க வேண்டும், முதலீடுகளை இங்கு கொண்டு வரவேண்டுமாக இருந்தால் இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு சமஷ்டி அரசமைப்பு அடிப்படையிலான தீர்வுக்கு அவர்கள் செல்ல வேண்டும். - என்றார்.

# இன்று முதல் யாழ்தேவி ரயில் சேவை ஒன்று விட்ட ஒரு நாளைக்கு நடக்கும்

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை பயணிக்கும் யாழ் தேவி ரயில் இன்று முதல் மீண்டும் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஒன்று விட்ட ஒரு நாளுக்கு இச்சேவை நடைபெறவுள்ளது.




அதன்படி, திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாள்களில் கொழும்புக் கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரை யாழ்தேவி ரயில் சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கான யாழ்தேவி ரயில் சேவை செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் மாத்திரம் இடம்பெறும்.

சனிக்கிழமை சேவை இல்லை.

இந்த ரயில் குளிரூட்டப்பட்ட 04 முதலாம் வகுப்பு பெட்டிகளைக் கொண்டதாகும்.

ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக அல்லது ஆசன முன்பதிவு வசதி கொண்ட ரயில் நிலையங்களுக்குச் சென்று பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்து கொள்ள முடியும்.



# தெரிவுக்குழுவின் காலத்தை இழுத்தடித்தால் சாணக்கியன், மனோ, நிஸாம் வெளியேறுவர்?

மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழு 3 மாத காலத்துக்குள் தனது விதப்புரை மற்றும் யோசனைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்காமல் குழுவின் காலத்தை நீடித்தால் குழுவில் இருந்து வெளிநடப்பு செய்வதற்கு செயற்குழுவின் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கம், நிஸாம் காரியப்பர் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் அவதானம் செலுத்தியுள்ளர்.

மாகாண சபைகள் தேர்தல்கள் எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்கும், அது தொடர்பான விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்குரிய விசேட தெரிவுக்குழுவை நியமிக்கும் பிரேரணையை 2026.01.06 ஆம் திகதியன்று அமைச்சரவை பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸவினால் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்தம் செய்து தற்போது வழக்கில் உள்ள 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு தேர்தல் முறைமைக்கமைய தொகுதி,எல்லை நிர்ணய முறைமை இதுவரையில் நிறைவுப்படுத்தாத காரணத்தால் சகல மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இயங்குகின்றன.

தேர்தல் முறைமை மற்றும் தேர்தல் சட்டத்தின் குறைகளை அவதானித்து அதற்குரிய திருத்தங்களை முன்வைக்க 2022ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட விசேட குழு 2017ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட கலப்புத் தேர்தல் முறைமைக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்து அதன் பின்னர் சட்ட வரைவை தயாரிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அது வரையில் விகிதாசார தேர்தல் முறைமையின் தேர்தலை நடத்தலாம் என்று யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த யோசனைக்கமைய மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தலாம் என்று ஆராய்ந்து விதப்புரை மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் 11 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன 2026.02.20 ஆம் திகதியன்று விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்தார்.

முழுமையான அதிகாரமளிக்கப்பட்ட இந்தத் தெரிவுக்குழு 03 மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதன் முதலாவது கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 07ஆம் திகதியன்று நடைபெற்றது.

இதற்கமைய மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து குழுவின் உறுப்பினரான சாணக்கியன் இராசமாணிக்கம் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் நான்கு அறிக்கைகளை கோரியுள்ளார்.

இதற்கமைய, செயற்குழு 03 மாத காலத்துக்குள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்காமல் குழுவின் காலத்தை நீடித்தால் குழுவில் இருந்து வெளிநடப்பு செய்வதற்கு குழுவின் உறுப்பினர்களான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சாணக்கியன் இராசமாணிக்கம், இலங்கைத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர் அவதானம் செலுத்தியுள்ளனர் என அறிய முடிகிறது.

மாகாணசபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் இம்முறையில் நடத்துவதற்கு தற்காலிக ஏற்பாடு ஒன்றை கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்கு எதிர்வரும் 21ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழுவினர் ஆகியோரைத் தெரிவுக்குழுவுக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய ஆணைக்குழு எல்லை நிர்ணய மீளாய்வு தொடர்பான அறிக்கை ஒன்றை செயற்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளது.

# தெனியாயவில் பாடசாலைகளை தொடர்ந்து மூடுவதற்கு தீர்மானம்

பாடசாலை மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் காய்ச்சல் நிலைமை காரணமாக, ஏற்கனவே மூடப்பட்டிருந்த தெனியாய கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகளைத் தொடர்ந்தும் மூடி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய, நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷாகா ஹெட்டிகொட தெரிவித்தார்.

அதன்படி, தெனியாய மத்திய கல்லூரி, தெனியாய ராஜபக்ஷ மகா வித்தியாலயம், தெனியாய புனித மத்தியூஸ் இருமொழிப் பாடசாலை மற்றும் பல்லேகம சித்தார்த்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இன்றும் நாளையும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் எனக் குறிப்பிட்டார்.

மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் இந்தக்




காய்ச்சல் நிலைமை காரணமாக, கடந்த 7 ஆம் திகதி முதல் இந்தப் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

# ‘பத்திரிகைத்துறையில் என் கதை’ தனபாலசிங்கத்தின் நூல் வெளியீடு

மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய “பத்திரிகைத் துறையில் என் கதை” நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் தம்பையா இராஜரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சட்ட நிபுணர் கனக ஈஸ்வரன் பிரதம அதிதியாகவும், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பேர்ஸ் சிலோன் லிமிட்டெட் நிருவாகப் பணிப்பாளர் குமார் நடேசன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்கிறார்கள்.

வாழ்த்துரையை பேராசிரியர் சின்னையா மௌனகுருவும், நூல் வெளியீட்டுரையை இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் தேவராசா முகுந்தனும், கருத்துரைகளை கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடப் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன், சமூக, அரசியல் செயற்பாட்டாளர் ஏ.யதீந்திரா ஆகியோரும் நிகழ்த்துவர்.

மூத்த பத்திரிகையாளரும் கலை இலக்கிய ஆளுமையுமான அன்னலக்சுமி இராஜதுரையை நூலாசிரியர் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும்.

தயாபரன் ரெஷாங்கன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவார்.









# தமிழரசு வவுனியா மாவட்டக் கிளையின் விசேடக் கலந்தாய்வுக் கூட்டம் நேற்று

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளையின் விசேட கூட்டம் நேற்று மாவட்டக் கிளைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது கட்சியின் எதிர்கால செயற்திட்டங்கள், கட்சிப் புனரமைப்பு பணிகள், உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும், சமகால அரசியல் நிலவரம் தொடர்பிலும் கட்சி உறுப்பினர்களுக்கு பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனினால் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கட்சியின் மாவட்ட, பிரதேசக் கிளைகள் மற்றும் இளைஞர் மகளிர் அணிகளின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உபதவிசாளர், உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.





# தமிழ் நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டம் இன்று கூடுகிறது




17 ஆவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடர் இன்று காலை 9.30 மணிக்கு கூடுகிறது.

இது தொடர்பாக முதன்மைச் செயலாளர் சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை வளாகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு 17 ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் கூடுகிறது. இன்றைய தினம் புதிதாக தேர்வு செய்யப்பட்டிருப்பவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களாக பதவியேற்க இருக்கிறார்கள்.

தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழுடன் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சட்டப் பேரவை உறுப்பினராக பதவி யேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சட்டப்பேரவையின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்தல் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு தற்காலிக சபா நாயகர் கருப்பையா பதவிப் பிரமாணம் செய்து வைக்க உள்ளார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் த.வெ.க. 108 தொகுதிகளிலும், தி.மு.க 59 தொகுதிகளிலும், அ.தி.மு.க. 47 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. காங்கிரஸ் 5, பா.ம.க. 4, சி.பி.ஐ 2, சி.பி.எம் 2, வி.சி.க 2, ஐ.யு.எம்.எல். 2, பா.ஜ.க. 1, தே.மு.தி.க. 1 ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டம் ஒழுங்கு நிலை குறித்து முதல்வர் விஜய் தலைமையில் ஆய்வு

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் தற்போதைய சட்டம் ஒழுங்கு நிலை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, பெண்கள் பாதுகாப்பை மேம்படுத்துதல், போதைப் பொருள்கள் தொடர்பான குற்றங்களைத் தடுத்து, கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இவை தொடர்பாக தொடர்ச்சியாக விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், காவல்துறை தலைமை இயக்குநர் சந்தீப் ராய் ரத்தோர், முதல்வரின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், முதல்வரின் செயலாளர் ஜி. லட்சுமி பிரியா பொலிஸ் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. சட்டப்பேரவை கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின் தேர்தெடுக்கப்பட்டார்

தி.மு.கவின் சட்டப்பேரவைக் கட்சியின் தலைவராக உதயநிதி ஸ்டாலின் தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து திமுக தலைமை வெளியிட்ட அறிக்கையில்,

"தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் 07-05-2026 மாலை 5.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது.



அக்கூட்டத்தில் தி.மு.க. சட்டப்பேரவை கட்சியின் தலைவராக உதயநிதி ஸ்டாலின், துணைத் தலைவராக கே.என். நேரு, கொறடாவாக எ.வ.வேலு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்." என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில், தி.மு.க. 59 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.





### “தமிழக அரசுடன் இணைந்து பணியாற்றுவோம்”

# பிரதமர் மோடி வாழ்த்து; முதல்வர் விஜய் நன்றி

தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழக அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும் என கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“தமிழ்நாடு முதல்வராக பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகள். அவரது பதவிக்காலம் சிறப்பானதாக அமைய நல்வாழ்த்துகள். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழ்நாடு அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும்” எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துள்ள முதல்வர் விஜய, “முதல்வராக நான் பொறுப்பேற்றதையொட்டி, தனது கனிவான வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மக்களின் நலனும் முன்னேற்றமுமே எங்களின் ஒரே குறிக்கோளாகும். தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்கு, ஒன்றிய அரசின் முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்” எனத் தெரிவித்துள்ளார்.



# தமிழக மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற விஜய்க்கு வாழ்த்துகள்

### ராகுல் காந்தி தெரிவிப்பு

“ஒரு புதிய தலைமுறை, ஒரு புதிய குரல், ஒரு புதிய தோற்றத்தை தமிழ்நாடு தேர்ந்தெடுத்துவிட்டது. தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற விஜய்க்கு என் நல்வாழ்த்துகள்““என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“ஒரு புதிய தலைமுறை, ஒரு புதிய குரல், ஒரு புதிய தோற்றத்தை தமிழ்நாடு தேர்ந்தெடுத்துவிட்டது. தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற விஜய்க்கு என் நல்வாழ்த்துகள்.” எனத் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -11.05.2026




இன்று மனத் திடத்துடன் இருக்க வேண்டியது அவசியம். உங்கள் பணிகளை கையாளும்போது சில தடைகள் ஏற்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். நேர் மறையான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ நீங்கள் மனம் திறந்து பேச வேண்டும். அனுசரித்து செல்வது நல்லது.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினை காரணமாக அசௌகரியமாக உணர்வீர்கள். முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்றைய நாள் சீராக இருக்கும். நண்பர்களும் உடனிருப்பவர்களும் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணியிடத்தில் சில இனிமையான ஆச்சரியங்களை சந்திப்பீர்கள். எனவே உங்கள் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாகத் தீர்க்கலாம். இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். அதை நல்ல முறையில் பயன்படுத்துவீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின முயற்சிகளின் மூலம் வெற்றி காண்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் நேர்மை மற்றும் உறுதி காரணமாக உங்கள் பணிக்கு நல்ல மதிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள ஆலோசனைகளை நடத்துவீர்கள்.

கடன்கள் மூலம் பண வரவு காணப்படும். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று மகிழ்ச்சியான ஆரோக்கியமான மன நிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். உங்கள் செயல்களை மேற்கொள்ளும்போது சில சவால்களை சந்திக்க நேரும். இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை.

குடும்பதில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் இருவருக்கும் இடையிலான உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

வீட்டுக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும். அவருக்கு வயிறு சம்பந்தமான உபாதை காணப்படும்.




இன்று பயணம் அதிகமாக காணப்படும். பலன்கள் தாமதமாக கிடைக்கும். எனவே திட்டமிட்டு செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல் காணப்படும். உரையாடும்போது உங்கள் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும்.

நிதி நிலைமை திருப்திகரமாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். அதனைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. முறையாக உடற்பயிற்சி செய்வது நல்லது.




இன்று வெற்றி எளிதாக கிடைக்கும். உங்களுடைய இனிமையான சுபாவம் பிறரிடம் உங்கள் மீதான நல்லெண்ணத்தை வளர்க்கும். நீங்கள் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் சவால்களை எளிதாகக் கையாள்வீர்கள். அனுசரித்து போகும் அணுகுமுறை உங்களை உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

காதல் ஜோடிகளிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவின் நல்லிணக்கம் மேம்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் மன உறுதி காரணமாக இன்று இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவே அவற்றை மேற்கொள்ளும் விதத்தில் உங்கள் செயல்களை திட்டமிதல் சிறந்தது. உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

வேலை விஷயமாக பயணம் செல்ல நேரும். ஆனால் அது திருப்தியை அளிக்காது. பயணத்தை தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சிப் பூர்வமான விடயங்களைக் கவனமாகக் கலந்தாலோசிக்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே புத்துணர்ச்சி அளிக்கும் எந்த விடயத்திலாவது ஈடுபடுங்கள்.




பயணத்தின்போது கவனமாக இருக்க வேண்டும். இசையைக் கேட்பது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியில் கவனம் குறைவாக காணப்படும். பணிகளை திட்டமிட்டு ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

தம்பதியரிடையே அன்பு குறைந்து காணப்படும். இது உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

பண வரவு செலவு இரண்டும் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

கவலைகளின் காரணமாக தூக்கமின்மை ஏற்படும். யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் -11.05.2026




மற்றவர்களுடன் சிறிது எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். உங்களுக்கு பிரியமானவர்களுடன் பேசும் போது கவனம் தேவை. இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் சிறந்த பலனை அளிக்காது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படலாம்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். கவனமாக இல்லாவிடில் பண நஷ்டம் ஏற்படும்.

சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பயணங்கள் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மிகுந்த ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் நல்ல செயற்றிறனுடன் செயல்படுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நல்ல புரிந்துணர்வு இருந்தால் தம்பதியரிடையே அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி மகிழ்ச்சியுடன் உணர்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இன்று உங்கள் எதிர்கால நலன் கருதி முதலீடு செய்யலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள சிறந்த நாள். நீங்கள் எடுக்கும் சிறிய முயற்சிகள் கூட உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் நல்லாதரவு கிடைக்கும்.

புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். கிடைக்கும் நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்கையில் ஒருமுறை வரும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நேர்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று உங்களிடம் நிறைந்து காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் திறனை அடைவதற்கு குறைந்த வாய்ப்பு காணப்படும். அனைத்துச் செயல்களையும் திட்டமிட்டுச் செய்யவும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளைக் கவனமாக கையாளவும். நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அமைதியைப் பராமரிப்பது நல்லது.

பண வரவு காணப்பட்டாலும் இன்று செலவும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதிர்ஷ்டத்தை இன்று நம்ப வேண்டாம். உங்கள் கடின உழைப்பின் மூலம் பலன் கிடைக்கும்.

சரியான நேரத்தில் உணவு உண்ணுங்கள். அதிக நீரைப் பருகுங்கள். தலைவலி பாதிப்பு ஏற்படலாம்.

# மின் கட்டணம் 18 வீதம் உயர்வினால் யார், யாருக்கு நேரடியாகவே பாதிப்பு?

இந்த ஆண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளுக்காக, 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் பிரிவினருக்கு மின்சாரக் கட்டணத்தை 18 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இன்று முதல் இந்த கட்டணத் திருத்தம் நடைமுறைக்கு வரவுள்ள போதிலும், இதற்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

2026-ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான மின்சாரக் கட்டணத் திருத்தத்தை ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. இதன்போது, 8 வீதம் முதல் 14.4 வீதம் வரையிலான மின்சாரக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான பின்னணியில், எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக மின் உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டி, "தேசிய கட்டமைப்பு இயக்கு நிறுவனம்" திருத்தப்பட்ட மின்சாரச் செலவு மதிப்பீட்டை கடந்த




ஏப்ரல் 27-ஆம் திகதி மீண்டும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

எவ்வாறாயினும், மின்சாரக் கட்டண அதிகரிப்பால் நுகர்வோர் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, 15 பில்லியன் ரூபா மானியத்தை வழங்குவதற்கு அரசாங்கம் எழுத்துப்பூர்வமாக ஆணைக்குழுவிடம் உடன்பட்டுள்ளது. இதன்படி, இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பானது நாட்டின் 95 சதவீத மின் நுகர்வோருக்குப் பொருந்தாது.

அதாவது, வீட்டுப் பிரிவில் 0 முதல் 180 அலகுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு எந்தவிதக் கட்டண அதிகரிப்பும் கிடையாது.

ஆனால், 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்துவோருக்கான கட்டணங்கள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளன:-

# 210 அலகுகள்: இதுவரை இருந்த ரூ. 9,570 கட்டணம், ரூ. 1,760 ஆல் அதிகரிக்கப்பட்டு ரூ. 11,330 ஆக மாறும்.

# 240 அலகுகள்: இதுவரை இருந்த ரூ. 12,120 கட்டணம், ரூ. 2,210 ஆல் அதிகரிக்கப்பட்டு ரூ. 14,330 ஆக மாறும்.

# 270 அலகுகள்: இவர்களுக்கான கட்டணம் ரூ. 2,660 ஆல் அதிகரிக்கும்.

# 300 அலகுகள்: இவர்களுக்கான மாதாந்தக் கட்டணம் ரூ. 3,110 ஆல் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.